# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2128/4 - 2019 ජූනි මස 17 වැනි සඳුදා - 2019.06.17

*2128/4 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு யூன் மாதம் 17 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பி. 11/1980* (xxxiii)

**1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, உணவுச் சட்டம்**

*1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, உணவுச் சட்டத்தின் 7 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 32 ஆம் பிரிவின்கீழ் உணவு மதியுரைக் குழுவின் கலந்தாலோசனையுடன் சுகாதார, போஷாக்கு மற்றும் சுதேச வைத்திய அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

டாக்டர் ராஜித சேனாரத்ன,
சுகாதார, போஷாக்கு மற்றும் சுதேச வைத்திய அமைச்சர்.

கொழும்பு,
*2019, யூன் 14.*

**ஒழுங்குவிதிகள்**

இவ்வொழுங்குவிதிகள், 2019 ஆம் ஆண்டின் உணவு (வளவுகளைப் பதிவுசெய்தல்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன், அவை 2020, சனவரி 01 ஆந் திகதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

2. இதற்கான அட்டவணை II இல் தரப்பட்ட வளவுகளில், விற்பனைக்காக அல்லது விற்பனைக்காக முன்வைக்கின்ற ஏதேனும் உணவை உற்பத்தி செய்கின்ற, தயாரிக்கின்ற, பாதுகாத்து வைக்கின்ற, பொதிசெய்கின்ற, களஞ்சியப்படுத்துகின்ற ஒவ்வோராளும் இதற்கான அட்டவணை I இல் தரப்பட்ட படிவத்தில் அத்தகைய வளவுகளைப் பதிவுசெய்வதற்கான விண்ணப்பமொன்றைச் செய்து, இயைபான ஆவணங்களின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகள், அட்டவணை VI இல் தரப்பட்டவாறாக உணவைக் கையாள்பவர்கள் பற்றிய மருத்துவப் பரிசோதனை அறிக்கை மற்றும் விண்ணப்பத்தைச் செயல்முறைப்படுத்தும் கட்டணம் என்பவற்றுடன் சேர்த்து அதனை இயைபான உணவு அதிகாரிக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

3. ஏதேனும் வளவு தொடர்பாக விண்ணப்பத்தைச் செயல்முறைப்படுத்தும் கட்டணமானது இதற்கான II ஆம் அட்டவணையில் தரப்பட்டவாறாக வளவுகளின் வகுதிகளுக்கிணங்க செலுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன், செலுத்தப்பட்ட தொகையையும் விண்ணப்ப இலக்கத்தையும் சுட்டிக்காட்டும் பற்றுச்சீட்டொன்று விண்ணப்பகாரருக்கு வழங்கப்படுதலும் வேண்டும்.

4. விண்ணப்பமொன்றைப் பெற்றுக்கொண்டதன் மீதும், V ஆம் அட்டவணையில் தரப்பட்டவாறாக விண்ணப்பத்தைச் செயல்முறைப்படுத்துவதற்கான கட்டணத்தைப் பெற்றுக்கொண்டதன் மீதும் இயைபான உணவு அதிகாரி, இதற்கான அட்டவணை III இல் தரப்பட்ட இடாப்பில் இயைபான விபரங்களைப் பதிவுசெய்தல் வேண்டும் என்பதுடன், ஏழு வேலை நாட்களுக்குள் விண்ணப்பத்தை அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு ஆற்றுப்படுத்துதலும் வேண்டும்.

5. அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர், இதற்கான அட்டவணை IV இல் தரப்பட்டுள்ளவாறாக இடாப்பொன்றை அவரது அலுவலகத்தில் பேணுதல் வேண்டும் ; அவ்விடாப்பில் ஒவ்வொரு விண்ணப்பம் பற்றியதுமான விபரங்கள் பதியப்படுதல் வேண்டும்.

6. அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர், விண்ணப்பத்தைப் பெற்றுக்கொண்டதிலிருந்து பதினான்கு வேலை நாட்களுக்குள், விண்ணப்பத்தில் தரப்பட்ட அளவு விபரங்களுக்கு இணங்க இயைபான வளவுகளைச் சோதித்து விதப்புரைகளுடன் சேர்த்து மதிப்பீட்டு அறிக்கையை இயைபான உணவு அதிகாரிக்குச் சமர்ப்பித்தல் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும், விண்ணப்பதாரர் விண்ணப்பத்தில் தரப்பட்ட தேவைப்படுத்தப்பட்ட அளவு விபரங்களை நிறைவேற்றுவதற்குத் தவறியுள்ளவிடத்து இயைபான உணவு அதிகாரி, வளவுகள் பற்றிய அடுத்துப் பின்னரான சோதனையொன்றை நிறைவேற்றுமாறு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரை எழுத்துமூலம் அறிவுறுத்துதல் வேண்டும்.

7. இயைபான உணவு அதிகாரி, அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரிடமிருந்து மதிப்பீட்டு அறிக்கையைப் பெற்றுக்கொண்டு அவசியமாகவிருப்பின் அம்மதிப்பீட்டு அறிக்கையைச் சரிபார்த்த பின்னர் ஏழு வேலைநாட்களுக்குள் -

(அ) பதிவுச் சான்றிதழை வழங்குதல் வேண்டும் ; அல்லது
(ஆ) விண்ணப்பத்தை நிராகரித்து அதற்கான காரணங்கள் பற்றி விண்ணப்பதாரருக்கு எழுத்தில் அறிவித்தல் வேண்டும்.

8. எந்த விண்ணப்பதாரரின் விண்ணப்பம் 7 ஆம் ஒழுங்குவிதியின் (ஆ) எனும் பந்தியின் கீழ் நிராகரிக்கப்பட்டதோ அந்த விண்ணப்பதாரர், இயைபான உணவு அதிகாரியின் முடிபைப் பெற்றுக்கொண்டதன்மேல், அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் மதிப்பீட்டு அறிக்கையில் தரப்பட்ட தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்த பின்னர், இயைபான எல்லா ஆவணங்களினதும் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளுடனும் விண்ணப்பத்தைச் செயல்முறைப்படுத்தும் கட்டணத்துடனும் சேர்த்து, இதற்கான அட்டவணை I இல் தரப்பட்டவாறாகவுள்ள புதியதொரு விண்ணப்பப்படிவத்தில் அவரது விண்ணப்பத்தை மீளவும் சமர்ப்பிக்கலாம்.

9. ஒழுங்குவிதி 8 இன்கீழ் பெறப்பட்ட ஏதேனும் விண்ணப்பம், 2 ஆம் ஒழுங்குவிதியின்கீழ் பெறப்பட்ட விண்ணப்பமொன்றென்றவாறாகக் கருதப்படுதல் வேண்டும்.

10. இதற்கான அட்டவணை VII இல் தரப்பட்டுள்ளவாறான பதிவுச் சான்றிதழ், இரண்டு ஆண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதிக்கு வலுவிலிருத்தல் வேண்டுமென்பதுடன், இயைபான ஆவணங்களின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளுடனும் விண்ணப்பத்தைச் செயல்முறைப்படுத்தும் கட்டணத்துடனும் சேர்த்து அட்டவணை I இல் தரப்பட்டுள்ளவாறாக விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் புதுப்பிக்கப்படுதலும் வேண்டும்.

11. இதற்கான அட்டவணை VII இல் தரப்பட்டுள்ளவாறான பதிவுச்சான்றிதழ் பிரதம உணவு அதிகாரியினால் வழங்கப்படும் தனித்துவமான அடையாள இலக்கமொன்றைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன், இயைபான உணவு அதிகாரியினால் கையொப்பமிடப்பட்டு அலுவலக இலச்சினை பொறிக்கப்பட்டிருத்தலும் வேண்டும். வழங்கப்படும் ஒவ்வொரு பதிவுச்சான்றிதழ் பற்றியதுமான விபரங்கள், அட்டவணை VIII இல் தரப்பட்டுள்ளவாறான இடாப்பில் இயைபான உணவு அதிகாரியினால் பதியப்படுதல் வேண்டும்.

12. ஒழுங்குவிதி 7 இன் (ஆ) என்னும் பந்தியின்கீழ் செய்யப்பட்ட முடிபொன்றினால் இன்னலுற்ற எவரேனுமாள், அத்தகைய முடிபு பெறப்பட்டதிலிருந்து பத்து வேலை நாட்களுக்குள் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு மேன்முறையீடு செய்யலாம்.

13. ஒழுங்குவிதி 12 இன் கீழான மேன்முறையீடொன்றைப் பெற்றுக்கொண்டதன் மேல் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், எந்த இடப்பரப்பில் மேன்முறையீடானது எழவில்லையோ அந்த இடப்பரப்பின் சுகாதார மருத்துவ அலுவலர் ஒருவர் (MOH), உணவு மற்றும் ஔடதங்கள் பரிசோதகர் ஒருவர் (FDI) மற்றும் பிரதேச மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஒருவர் (SPHID) ஆகியோரைக் கொண்ட (இதனகத்துப் பின்னர் "மேன்முறையீட்டுச் சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) சபையொன்றை நியமதித்தல் வேண்டும்.

14. மேன்முறையீட்டுச் சபை, அது அமைத்துருவாக்கப்பட்ட பின்னரான பத்து வேலை நாட்களுக்குள், இயைபான வளவுகளைப் பரிசோதித்து பிராந்திய சுகாதாரப் பணிப்பாளருக்கு அதனது விதப்புரைகளைச் செய்தல் வேண்டும்.

15. மேன்முறையீட்டுச் சபையின் விதப்புரைகளைக் கவனத்தில் கொண்டதன் பின்னர் பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் –

(அ) மேன்முறையீட்டை அனுமதிக்கலாம் ; அல்லது
(ஆ) குறித்தளிக்கப்பட்ட காரணங்களுடன் மேன்முறையீட்டைத் தள்ளுபடி செய்யலாம் ;

அத்துடன், அவர் ஏழு வேலை நாட்களுக்குள் அவரது முடிபு பற்றி விண்ணப்பதாரருக்கும் இயைபான உணவு அதிகாரிக்கும் அறிவித்தலும் வேண்டும்.

ஆயின், (அ) என்னும் பந்தியின்கீழ் மேன்முறையீடு அனுமதிக்கப்பட்டுள்ளவிடத்து இயைபான உணவு அதிகாரி, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் முடிபை அதற்கிணங்க நிறைவேற்றுதல் வேண்டும்.

16. பதிவுச் சான்றிதழானது, வாடிக்கையாளர்களுக்கும், சோதனை செய்யும் அலுவலர்களுக்கும் புலப்படத்தக்க முறையொன்றில் வளவுகளினுள் துலாம்பரமான இடமொன்றில் வெளிக்காட்டி வைக்கப்படுதல் வேண்டும்.

17. எந்த வளவுகள் தொடர்பில் பதிவுச்சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளதோ அந்த வளவுகளின் கட்டமைப்புக்கு அல்லது வசதிகளுக்கு இயைபான உணவு அதிகாரியின் எழுத்திலான அனுமதியின்றி, மாற்றங்கள் அல்லது மாற்றியமைத்தல்கள் செய்யப்படுதலாகாது. எவ்வாறாயினும், உணவுக் காப்பு மற்றும் சுகாதாரம் உட்பட, செய்முறைகளைச் சீராக்குவதற்கெனச் செய்யப்பட்ட மாற்றங்களையும் மாற்றியமைத்தல்களையும் இது தடுத்தலாகாது.

18. பதிவுச்சான்றிதழைப் புதுப்பிப்பதற்கான விண்ணப்பம், அப்பதிவுச் சான்றிதழின் முடிவுத் திகதிக்கு மூன்று மாதங்களுக்கு முன்னர் இயைபான உணவு அதிகாரிக்குச் செய்யப்படுதல் வேண்டும்.

19. பதிவுச்சான்றிதழ் தொலைந்துபோகும் அல்லது சேதமடைந்து போகும் பட்சத்தில், அதன் பிரதியொன்றுக்கான விண்ணப்பம் ஐந்நூறு ரூபா கட்டணத்துக்கமைவாக இயைபான உணவு அதிகாரிக்குச் செய்யப்படுதல் வேண்டும்.

20. இவ்வொழுங்கு விதிகள் எத்திகதியில் பயனுக்கு வருகின்றனவோ அத்திகதியில் எவையேனும் வளவுகளில் விற்பனைக்காக அல்லது விற்பனைக்காக முன்வைக்கப்பட்ட ஏதேனும் உணவை உற்பத்தி செய்திருக்கின்றவரான, தயாரித்திருக்கின்றவரான, பாதுகாத்து வைத்திருக்கின்றவரான பொதி செய்திருக்கின்றவரான, களஞ்சியப்படுத்தி வைத்திருக்கின்றவரான எவரேனுமாள் இவ்வொழுங்குவிதிகள் எத்திகதியில் பயனுக்கு வருகின்றனவோ அத்திகதியில் இருந்து ஆறு மாதங்களுக்குள் பதிவுச்சான்றிதழ் ஒன்றைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

21. வளவுகளின் சொத்தாண்மை மாறுகின்றவிடத்து, புதிய சொந்தக்காரர் சொத்தாண்மையின் மாற்றம் பற்றி உணவு அதிகாரிக்கு அறிவித்தல் வேண்டும்.

22. இவ்வொழுங்குவிதிகள், இதற்கான II ஆம் அட்டவணையில் தரப்பட்டுள்ள எந்த வளவுகள் தொடர்பில் ISO 22000 இற்குச் சமமான அல்லது அதற்கு மேலான உணவுக் காப்பு முகாமைத்துவ முறைமை பற்றிய செல்லுபடியான சான்றுப்படுத்துகையொன்று வழங்கப்பட்டுள்ளதோ அந்த வளவுகளின் ஏதேனும் வகுதிக்கு ஏற்புடையற்பாலனவாதல் ஆகாது.

23. இவ்வொழுங்கு விதிகளின் நோக்கங்களுக்காக –

"AOC" என்பது, அமீபா, சினை முட்டை மற்றும் நீர்க்கட்டி எனப் பொருள்படும் ;

"அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்" என்பது, உணவுச் சட்டத்தில் குறித்தளிக்கப்பட்டவாறான அதே பொருளைக் கொண்டதாகும் ;

"வெதுப்பகம்" என்பது, பாண், குக்கீஸ், கேக்ஸ், பேஸ்ட்ரி, பைஸ் முதலியன போன்ற வேகவைத்த மாவை அடிப்படையாகக் கொண்ட உணவுகளைத் தயாரிக்கின்ற மற்றும் விற்பனை செய்கின்ற வர்த்தகத் தாபனமொன்றெனப் பொருள்படும் ;

"சிற்றுண்டிச்சாலை" என்பது, ஒரு நிறுவனம், பாடசாலை, கல்லூரி, பல்கலைக்கழகம், தொழிற்சாலை அல்லது கம்பனியினால் அதன் மாணவர்களுக்காக அல்லது பணியாட்டொகுதியினருக்காக அதே வளவுகளில் ஏற்பாடு செய்யப்பட்டு பரிமாறப்படும் உணவுகளை வாடிக்கையாளர்கள் அமர்ந்து உட்கொள்ளும் ஒரு வர்த்தகத் தாபனம் எனப் பொருள்படும் ;

"உணவு வழங்கு சேவைத்தாபனம்" என்பது, சமூக நிகழ்வுகள் மற்றும் வேறு ஒன்றுகூடல்களில் உணவு மற்றும் பானங்களை வழங்குகின்ற ஒரு வர்த்தகத் தாபனம் எனப் பொருள்படும் ;

"உணவுச் சட்டம்" என்பது. 1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, உணவுச் சட்டம் எனப் பொருள்படும் ;

"உணவு அதிகாரி" என்பது, உணவுச் சட்டத்தில் குறித்தளிக்கப்பட்டவாறான அதே பொருளைக் கொண்டதாகும் ;

"உணவைக் கையாள்பவர்" என்பது, பொதி செய்யப்பட்ட அல்லது பொதி செய்யப்படாத உணவு, உணவு உபகரணம் மற்றும் பாத்திரங்கள் அல்லது உணவு வைக்கப்படும் மேற்பரப்புக்கள் என்பவற்றை நேரடியாகக் கையாள்கின்ற எவரேனுமாள் எனப் பொருள்படும் ;

"உணவுக் களஞ்சியம்" என்பது, தற்காலிகமாக உணவை வைப்பதற்கான ஒரு களஞ்சியமாகும் ;

"GHP" என்பது, நல்ல சுகாதார செயல்முறைகள் எனப் பொருள்படும் ;

"GMP" என்பது, நல்ல உற்பத்திச் செயல்முறைகள் எனப் பொருள்படும் ;

"ஹோட்டல் அல்லது உல்லாசப் போக்கிடம்" என்பது, தங்குமிடம், உணவுகள், பானங்கள் மற்றும் வேறு விருந்தினர் சேவைகள் என்பவற்றை வழங்குகின்ற ஒரு வர்த்தகத் தாபனம் எனப் பொருள்படும் ;

"ஐஸ்கிரீம், தின்பண்டங்கள், யோக்கட், தயிர் மற்றும் ஈற்றுணவு உற்பத்தி செய்யப்படும் குடிசைக் கைத்தொழில்கள்" என்பது, ஐஸ்கிரீம், தின்பண்டங்கள், யோக்கட், தயிர் மற்றும் ஈற்றுணவுகள் உற்பத்தி செய்யப்படும் தொழில் அல்லது பொது மக்களின் வீடுகளில் கொண்டு நடாத்தப்படும் அத்தகைய விற்பனை செயற்பாடுகள் எனப் பொருள்படும் ;

"பனிக்கட்டி உற்பத்தி செய்யப்படும் செயலிடம்" என்பது, குடிக்கத்தகுந்த நீரினால் பனிக்கட்டி உற்பத்தி செய்யப்படும் அல்லது விற்பனை செய்யப்படும் ஒரு செயலிடம் எனப் பொருள்படும் ;

"ஆள்" என்பது, கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத ஆட்களின் குழு எதனையும் உள்ளடக்குகின்றது ;

"குடிக்கத்தகுந்த நீர்" என்பது, குடிப்பதற்கு, சமைப்பதற்கு பௌதிக ரீதியில், இரசாயன ரீதியில் மற்றும் நுண்ணுயிரியல் ரீதியில் காப்பானதும் SLS 614 இற்கு இணங்கியொழுகி உணவுச் செய்முறைப்படுத்தலில் உபயோகிக்கப்படத்தக்கதுமான நீர் எனப் பொருள்படும் ;

"வளவுகள்" என்பது, வர்த்தக நோக்கங்களுக்காக எந்தக் கட்டிடத்தில் அல்லது இடப்பரப்பில் உணவு கையாளப்படுகின்றதோ அந்தக் கட்டிடம் அல்லது இடப்பரப்பு என்பதுடன் அதே முகாமைத்துவத்தின் கட்டுப்பாட்டின் கீழான அதனது சுற்றுப்புறங்களும் எனப் பொருள்படும் ;

"உணவு விடுதி அல்லது உணவகம்" என்பது, வளவுகளில் சமைக்கப்பட்டு அல்லது தயாரிக்கப்பட்டு பரிமாறப்படும் உணவுகள், பானங்கள் அல்லது சிற்றுண்டிகளை மக்கள் அமர்ந்து உட்கொள்ளும் ஒரு வளவு எனப் பொருள்படும் ;

"பல்பொருள் அங்காடி" என்பது, உண்பதற்குத் தயார் நிலையிலுள்ள அல்லது தயாரிக்கப்பட்ட உணவு உட்பட, பரந்த பல்வேறுபட்ட உணவுகளையும் வீட்டுப் பாவனைப் பொருட்களையும் விற்பனைக்காக முன்வைக்கின்ற ஒரு சுய சேவைக் களஞ்சியம் எனப் பொருள்படும் ;

"தேநீர், கோப்பி, பானங்கள் அல்லது ஐஸ்கிரீம் சிறுகடை" என்பது, தேநீர், கோப்பி, பானங்கள் அல்லது ஐஸ்கிரீம் பரிமாறப்படுகின்ற ஒரு வளவு எனப் பொருள்படும் ;

"UFR" என்பது, சிறுநீர் பற்றிய முழு அறிக்கை எனப் பொருள்படும்.

(ஒழுங்குவிதிகள் 2, 8 மற்றும் 10)

அட்டவணை I

உணவுத் தாபனமொன்றின் பதிவுச் சான்றிதழுக்கும் புதுப்பித்தலுக்குமான விண்ணப்பப்படிவம்

| | |
|---|---|
| விண்ணப்பத்தின் தொடர் இலக்கம்<br>(அலுவலர் பாவனைக்கு மட்டும்) | |

| | | |
|---|---|---|
| | பாகம் I<br>**அடையாளங்காணல் பற்றிய விபரங்கள்** | |
| | **வரையறுக்கப்பட்ட கம்பனி, வரையறுக்கப்படாத கம்பனி அல்லது உத்தரவாதத்தால் வரையறுக்கப்பட்ட கம்பனிக்கானது.** | |
| 1 | கம்பனியின் பெயர் | |
| 2 | கம்பனியின் முகவரி<br>(தயவுசெய்து அணுகுகையைக் காட்டும் வரைபடமொன்றை இணைக்க.) | |
| 3 | கம்பனி பதிவு இலக்கம் | |
| 4 | வளவுகளின் பெயர்<br>(மேலுள்ளதிலிருந்து வேறுபடின்) | |
| 5 | வளவுகளின் முகவரி | |
| | **தனியாட்களுக்குச் சொந்தமான தனியார் தாபனங்களுக்கானது** | |
| 6 | வளவுகளின் பெயர் | |
| 7 | வளவுகளின் முகவரி<br>(தயவுசெய்து அணுகுகையைக் காட்டும் வரைபடமொன்றை இணைக்க.) | |
| | **தொடர்புகொள்ளக்கூடிய விபரங்கள்** | |
| 8 | விண்ணப்பதாரரின் பெயர் | |
| 9 | விண்ணப்பதாரரின் பதவிநிலை | |
| 10 | தொலைபேசி (நிலையான இணைப்பு) | |
| 11 | தொலைபேசி (செல்லிடத் தொலைபேசி) | |
| 12 | மின்னஞ்சல் முகவரி (ஏதேனும் இருப்பின்) | |
| 13 | வளவுகளின் வகுப்பாக்கம்<br>(நிரப்புவதற்கு முன்னர் தயவுசெய்து அறிவுறுத்தல்களை வாசிக்கவும்)<br>இயைபான எழுத்தைச் சுற்றி வட்டமிடுக. | அ ஆ இ ஈ உ ஊ எ ஏ ஐ ஒ |

| பாகம் II<br>**உணவைக் கையாள்பவர்கள் பற்றிய விபரங்கள்** | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | **விண்ணப்பதாரரினால் நிரப்பப்படுதல் வேண்டும்** | | | | | **அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் நிரப்பப்படுதல் வேண்டும்** | |
| தொடர் இல. | பெயர் | பதவிநிலை | வயது | பால் | தொழில்புரியும் காலம் | பயிற்றப்பட்டவரா (ஆம்/இல்லை)* | தனிப்பட்ட மருத்துவப் பரிசோதனை செய்யப்பட்டது. (ஆம்/இல்லை)* |
| 1 | | | | | | | |
| 2 | | | | | | | |
| 3 | | | | | | | |
| 4 | | | | | | | |
| 5 | | | | | | | |
| 6 | | | | | | | |
| 7 | | | | | | | |
| 8 | | | | | | | |
| 9 | | | | | | | |
| 10 | | | | | | | |
| 11 | | | | | | | |
| 12 | | | | | | | |
| 13 | | | | | | | |
| 14 | | | | | | | |
| 15 | | | | | | | |
| 16 | | | | | | | |
| 17 | | | | | | | |
| 18 | | | | | | | |
| 19 | | | | | | | |
| 20 | | | | | | | |
| 21 | | | | | | | |
| 22 | | | | | | | |
| 23 | | | | | | | |
| 24 | | | | | | | |
| 25 | | | | | | | |
| *பதிவேடுகளைச் செவ்வை பார்த்தல் | | | | | | | |
| இவ்விடைவெளி போதாமலிருப்பின் தயவு செய்து தனிவேறான தாள் ஒன்றை இணைக்கவும். | | | | | | | |

| | பாகம் III<br>**வளவுகள்** | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | விண்ணப்பதாரரினால் நிரப்பப்படுதல் வேண்டும் (பின்வருவனவற்றுடன் இணங்கியொழுகுவதனை உறுதிப்படுத்துவதற்கான படிமுறைகள் விண்ணப்பதாரரினால் எடுக்கப்பட்டுள்ளனவா) | | 1 ஆவது விஜயம் (அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் நிரப்பப்படுதல் வேண்டும்) | | 2 ஆவது விஜயம் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் நிரப்பப்படுதல் (வேண்டும்) | |
| | | ஆம் | இல்லை | திருப்தி | திருப்தியில்லை | திருப்தி | திருப்தியில்லை |
| 1 | வளவானது களைகள், புற்கள் மற்றும் குப்பைக் கூளங்களிலிருந்து சுத்தமாக உள்ளது. | | | | | | |
| 2 | நிலத்தில் நீர் தேங்கியில்லாது உள்ளது. | | | | | | |
| 3 | நீர் வழங்கல் தரமாகவும் காப்பாகவும் உள்ளது. | | | | | | |
| 4 | தரைகள், சுவர்கள், உட்கூரைகள், யன்னல்கள் மற்றும் திரைகள் என்பவற்றின் பராமரிப்பும் அவற்றின் தூய்மையும். | | | | | | |
| 5 | பூச்சிகளிலிருந்து பாதுகாப்பதற்காகவுள்ள வழிமுறைகள். | | | | | | |
| 6 | உணவு கையாளப்படும் பகுதிக்கான கதவுகள் போதியளவில் அடைக்கப் பட்டிருத்தல். | | | | | | |
| 7 | உணவு வெளிக்காட்டி வைக்கப்பட்டிருக்கும் இடங்களில் பீடைகளுக்கான மறைவிடங்களுக்கு அல்லது நுழைவிடங்களுக்கு ஏற்புடையனவான துவாரங்களும் வெடிப்புக்களும் நிரப்பப்பட்டிருத்தல். | | | | | | |

| | பாகம் III<br>**வளவுகள்** | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | விண்ணப்பதாரரினால் நிரப்பப்படுதல் வேண்டும் (பின்வருவனவற்றுடன் இணங்கியொழுகுவதனை உறுதிப்படுத்துவதற்கான படிமுறைகள் விண்ணப்பதாரரினால் எடுக்கப்பட்டுள்ளனவா) | | 1 ஆவது விஜயம் (அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் நிரப்பப்படுதல் வேண்டும்) | | 2 ஆவது விஜயம் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் நிரப்பப்படுதல் (வேண்டும்) | |
| | | ஆம் | இல்லை | திருப்தி | திருப்தியில்லை | திருப்தி | திருப்தியில்லை |
| 8 | உணவு வெளிக்காட்டி வைக்கப்பட்டிருக்கும் இடங்களில் கூரையில், கூரை மின்குமிழ்களில், யன்னல்களில், திரைகளில் அல்லது மேற்றலைக் குழாயில் ஒழுக்குகளுக்கான அடையாளங்கள் இல்லாதிருத்தல். | | | | | | |
| 9 | உணவு வெளிக்காட்டி வைக்கப்பட்டிருக்கும் இடங்களில் மின்குமிழ் கள் வெடித்து உடைந்த கண்ணாடித் துண்டுகள் மூலம் தயாரிப்புக்கள் மாசு படுத்தப்படுவதைத் தடுப்பதற்கு கவசங்களால் மூடப்பட்ட மேற்றலை மின்குமிழ்கள். | | | | | | |
| 10 | வீட்டு விலங்குகளின் அல்லது எவையேனும் செல்லப் பிராணிகள் உள்ளமைக்கான சான்று இல்லாதிருத்தல். | | | | | | |
| 11 | வேலையாட்களின் ஓய்வறைகளின் தூய்மை. | | | | | | |
| 12 | கழிவறைகளின் தூய்மை. | | | | | | |
| 13 | கை கழுவும் வசதிகளும் கைகளை உலர்த்துவதற்கான வசதிகளும் ஏற்பாடு செய்யப்பட்டிருத்தல். | | | | | | |
| 14 | பீடைக் கட்டுப்பாட்டுச் செயற்பாடுகள். | | | | | | |

| | பாகம் III<br>**வளவுகள்** | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | விண்ணப்பதாரரினால் நிரப்பப்படுதல் வேண்டும் (பின்வருவனவற்றுடன் இணங்கியொழுகுவதனை உறுதிப்படுத்துவதற்கான படிமுறைகள் விண்ணப்பதாரரினால் எடுக்கப்பட்டுள்ளனவா) | | 1 ஆவது விஜயம் (அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் நிரப்பப்படுதல் வேண்டும்) | | 2 ஆவது விஜயம் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் நிரப்பப்படுதல் (வேண்டும்) | |
| | | ஆம் | இல்லை | திருப்தி | திருப்தியில்லை | திருப்தி | திருப்தியில்லை |
| 15 | பீடைகொல்லிப் பிரயோகிகளைக் களஞ்சியப்படுத்தல். | | | | | | |
| 16 | கழிவுத் தொட்டிகளின் தூய்மை. | | | | | | |
| 17 | ஒளியூட்டல். | | | | | | |
| 18 | கூரையைக் கொண்ட புகைபோக்கி உள்ளதா என்பது. | | | | | | |
| 19 | வாடிக்கையாளர் களுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட கழிவறை வசதிகள். | | | | | | |
| 20 | வாடிக்கையாளர்களுக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ள கை கழுவும் வசதிகள். | | | | | | |
| 21 | வாடிக்கையாளர் களுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட காகிதத்திலான மேசைக் கைக்குட்டைகள் (அச்சடிக்கப்பட்ட காகிதங்கள் அல்ல). | | | | | | |
| 22 | திரவக் கழிவுகள் முறையாக அகற்றப்படுதல். | | | | | | |

| | பாகம் IV<br>**உபகரணமும் கொள்கலன்களும்** | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | விண்ணப்பதாரரினால் நிரப்பப்படுதல் வேண்டும் (பின்வருவனவற்றுடன் இணங்கியொழுகுவதனை உறுதிப்படுத்துவதற்கான படிமுறைகள் விண்ணப்பதாரரினால் எடுக்கப்பட்டுள்ளனவா) | | 1 ஆவது விஜயம் (அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் நிரப்பப்படுதல் வேண்டும்) | | 2 ஆவது விஜயம் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் நிரப்பப்படுதல் (வேண்டும்) | |
| | | ஆம் | இல்லை | ஆம் | இல்லை | ஆம் | இல்லை |
| 1 | உணவு தொடர்பாகவுள்ள எல்லாக உபகரணங்களும் கொள்கலன்களும் உணவுத் தரத்திலானவையாக உள்ளன. | | | | | | |
| 2 | வெளியில் எடுத்துச் செல்லப்படும் உணவானது, உணவுத் தரப் பொருட்களில் உறையிடப்பட்டுள்ளது அல்லது பொதி செய்யப்பட்டுள்ளது. | | | | | | |
| 3 | அவிப்பதற்காக, வேக வைப்பதற்காக, அல்லது எவ்வடிவத்திலேனும் சூடாக்குவதற்காக பொலித்தீன் அல்லது பிளாஸ்டிக் தாள்கள் அல்லது கொள்கலன்கள் பயன்படுத்தப்படுதல். | | | | | | |
| 4 | உணவு தொடர்பாகவுள்ள எல்லா உபகரணங்களும் கொள்கலன்களும் உணவு மாசுபடுவதைத் தடுப்பதற்கு அவசியமான போதெல்லாம் தூய்மையாகவும் சுகாதார மாகவும் உள்ளன. | | | | | | |
| 5 | உபகரணத்தின் மீது உணவு அல்லது வேறு பொருளின் சேர்க்கை உள்ளதா ? (துரு, கழிவுத்திரட்டு). | | | | | | |

| | பாகம் IV<br>உபகரணமும் கொள்கலன்களும் | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | விண்ணப்பதாரரினால் நிரப்பப்படுதல் வேண்டும் (பின்வருவனவற்றுடன் இணங்கியொழுகுவதனை உறுதிப்படுத்துவதற்கான படிமுறைகள் விண்ணப்பதாரரினால் எடுக்கப்பட்டுள்ளனவா) | | 1 ஆவது விஜயம் (அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் நிரப்பப்படுதல் வேண்டும்) | | 2 ஆவது விஜயம் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் நிரப்பப்படுதல் (வேண்டும்) | |
| | | ஆம் | இல்லை | ஆம் | இல்லை | ஆம் | இல்லை |
| 6 | உபகரணத்தின் மீது உணவுகளை மாசடையச் செய்யக்கூடிய சுத்தப்படுத்தும் கரைப்பான்களின் அல்லது மசகுப் பொருட்களின் கசிவு ஏதேனும் காணப்படுகின்றதா ? | | | | | | |
| 7 | சுத்தப்படுத்துவதற்கும் சோதனையிடுவதற்கும் உபகரணத்தைக் கழற்றுவது கடினமாக உள்ளதா ? | | | | | | |
| 8 | பூச்சிகளும் கிருமிகளும் கூடுகளை அமைக்கக்கூடிய இயந்திரத் தொகுதியிலும் அதனைச் சூழவும் உணவு மற்றும் வேறு கழிபொருள்கள் சேகரிக்கப்படுகின்றனவா ? | | | | | | |
| 9 | வளவில் தூசு படிந்த, சேதமடைந்த, மங்கிய அல்லது நிறம் மாறிய கொள்கலன்கள் உள்ளனவா ? | | | | | | |
| 10 | வேலை செய்யும் தளங்கள் அல்லது மேசையின் மேற்பரப்புக்கள் அத்தகைய நோக்கத்துக்குப் பொருத்தமானவையா ? (துருப்பிடிக்காத வெள்ளி இரும்பு விரும்பத்தக்கது). | | | | | | |

| | பாகம் IV<br>**உபகரணமும் கொள்கலன்களும்** | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | விண்ணப்பதாரரினால் நிரப்பப்படுதல் வேண்டும் (பின்வருவனவற்றுடன் இணங்கியொழுகுவதனை உறுதிப்படுத்துவதற்கான படிமுறைகள் விண்ணப்பதாரரினால் எடுக்கப்பட்டுள்ளனவா) | | 1 ஆவது விஜயம் (அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் நிரப்பப்படுதல் வேண்டும்) | | 2 ஆவது விஜயம் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் நிரப்பப்படுதல் (வேண்டும்) | |
| | | ஆம் | இல்லை | ஆம் | இல்லை | ஆம் | இல்லை |
| 11 | போதுமான எண்ணிக்கையினவான இடுக்கிகள் கிடைக்கத்தக்கதாகக் காணப்படுதல். | | | | | | |

| | பாகம் V<br>**செய்முறைகள்** | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | விண்ணப்பதாரரினால் நிரப்பப்படுதல் வேண்டும் (பின்வருவனவற்றுடன் இணங்கியொழுகுவதனை உறுதிப்படுத்துவதற்கான படிமுறைகள் விண்ணப்பதாரரினால் எடுக்கப்பட்டுள்ளனவா) | | 1 ஆவது விஜயம் (அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் நிரப்பப்படுதல் வேண்டும்) | | 2 ஆவது விஜயம் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் நிரப்பப்படுதல் (வேண்டும்) | |
| | | ஆம் | இல்லை | ஆம் | இல்லை | ஆம் | இல்லை |
| 1 | நேரடியாக உணவுத் தயாரிப்புக்களைக் கையாளும்போது ஊழியர்கள் முறையான தலைமூடி, தாடிமூடி, முகமூடி, அகற்றத்தக்க கையுறைகள், தூய்மையான பாதுகாப்பு ஆடைகள் மற்றும் காலணி என்பவற்றை அணிதல். | | | | | | |

| | பாகம் V<br><br>**செய்முறைகள்** | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | விண்ணப்பதாரரினால் நிரப்பப்படுதல் வேண்டும் (பின்வருவனவற்றுடன் இணங்கியொழுகுவதனை உறுதிப்படுத்துவதற்கான படிமுறைகள் விண்ணப்பதாரரினால் எடுக்கப்பட்டுள்ளனவா) | | 1 ஆவது விஜயம் (அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் நிரப்பப்படுதல் வேண்டும்) | | 2 ஆவது விஜயம் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் நிரப்பப்படுதல் (வேண்டும்) | |
| | | ஆம் | இல்லை | ஆம் | இல்லை | ஆம் | இல்லை |
| 2 | நேரடியாக உணவுத் தயாரிப்புக்களைக் கையாளும்போது ஊழியர்கள் நகைகள், மோதிரங்கள், கைக்கடிகாரங்கள், விரல் நக மெருகூட்டிகள் அல்லது பிளாஸ்டர்கள் அல்லது கட்டுந்துணிகள் என்பவற்றை அணியாதிருத்தல். | | | | | | |
| 3 | ஊழியர்கள் ஒவ்வொரு முறையும் கழிவறைக்குச் சென்றுவந்த பின்னர் அவர்களுடைய கைகளைக் கழுவிச் சுத்தப்படுத்துதல். | | | | | | |
| 4 | அவர்களுடைய கைகள் அழுக்கடையும்போது அல்லது மாசுபடுத்தப் படும்போது கைகளைக் கழுவிக்கொள்ளும் வசதி பயன்படுத்தப்படுகின்றது. | | | | | | |
| 5 | உணவைக் கையாள்ப வர்கள் சிறந்த தனிப் பட்ட சுகாதாரச் செயல்முறைகளைப் பேணுகின்றனர். | | | | | | |
| 6 | வருகையாளர்கள் உணவுச் செய்முறைப்படுத்தற் பகுதிக்குள் நுழையும்போது முறையான உடைகளையும் தலைக்கான வலைகளையும் அணிகின்றனர். | | | | | | |
| 7 | உற்பத்திப் பகுதியின் மாசுபடுத்துகையைத் தடுப்பதற்கு பொறித் தொகுதியினுள்ளான நடமாட்டம் கட்டுப்படுத் தப்பட்டுள்ளது. | | | | | | |

| | பாகம் V<br>**செய்முறைகள்** | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | விண்ணப்பதாரரினால் நிரப்பப்படுதல் வேண்டும் (பின்வருவனவற்றுடன் இணங்கியொழுகுவதனை உறுதிப்படுத்துவதற்கான படிமுறைகள் விண்ணப்பதாரரினால் எடுக்கப்பட்டுள்ளனவா) | | 1 ஆவது விஜயம் (அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் நிரப்பப்படுதல் வேண்டும்) | | 2 ஆவது விஜயம் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் நிரப்பப்படுதல் (வேண்டும்) | |
| | | ஆம் | இல்லை | ஆம் | இல்லை | ஆம் | இல்லை |
| 8 | உணவைக் கையாள்பவர்கள், தாம் மேலேயுள்ள முன்னெச்சரிக்கைகளை ஏன் பின்பற்ற வேண்டும் என்பதற்கான காரணங்களைப் பற்றி அறிந்து வைத்துள்ளனர். | | | | | | |
| 9 | உணவைக் கையாள்பவருக்கான பயிற்சியானது GHP மற்றும் GMP என்பவற்றை உள்ளடக்குகின்றது. | | | | | | |
| 10 | உணவுத் தயாரிப்புக்கள் ஏற்றுத்தட்டுக்களில் களஞ்சியப்படுத்தப்பட்டு சுவர்களிலிருந்து ஆகக் குறைந்தது பதினெட்டு அங்குலங்களுக்கு அப்பால் வைக்கப்பட்டுள்ளனவா ? | | | | | | |
| 11 | தரம் கெட்டுப் போவதனூடாக மாசுறுவதற்கான சாத்தியத்தைக் குறைப்பதற்காக, முதலாவது வைக்கப்படுவது முதலாவதாக எடுக்கப் படுதல் (FIFO) என்னும் அடிப்படையில் அல்லது வேறு ஏதேனும் ஏற்றுக் கொள்ளப்பட்ட முறையில் தயாரிப்புக்கள் களஞ்சியப் படுத்தப்படுகின்றனவா ? | | | | | | |
| 12 | இருப்புக்களின் முறையான சுழற்சியை உறுதிப்படுத்துவதற்கும் உள்ளக கண்காணிப்பு நோக்கங்களுக்காகவும் உள்வரும் எல்லாத் தயாரிப்புக்களும் திகதியிடப்படுகின்றனவா ? | | | | | | |

| | பாகம் V<br><br>**செய்முறைகள்** | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | விண்ணப்பதாரரினால் நிரப்பப்படுதல் வேண்டும் (பின்வருவனவற்றுடன் இணங்கியொழுகுவதனை உறுதிப்படுத்துவதற்கான படிமுறைகள் விண்ணப்பதாரரினால் எடுக்கப்பட்டுள்ளனவா) | | 1 ஆவது விஜயம் (அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் நிரப்பப்படுதல் வேண்டும்) | | 2 ஆவது விஜயம் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் நிரப்பப்படுதல் (வேண்டும்) | |
| | | ஆம் | இல்லை | ஆம் | இல்லை | ஆம் | இல்லை |
| 13 | மாசடைவதைத் தடுப்பதற்காக, பயன்படுத்தப்படாத பொருட்கள் முறையாக மீளடைக்கப்படுகின்றனவா ? | | | | | | |
| 14 | சமைக்கப்பட்ட மற்றும் சமைக்கப்படாத பொருட்கள் தனிவேறாக வைக்கப்பட்டுள்ளன. | | | | | | |
| 15 | பனிக்கட்டியானது குடிக்கத்தகுந்த நீரினால் செய்யப்பட்டுள்ளது. | | | | | | |
| 16 | அனுமதிக்கப்பட்ட உணவுச் சேர்மானங்கள் மாத்திரம் அனுமதிக்கப்பட்ட அளவுகளில் பயன்படுத்தப்பட்டுள்ளன. | | | | | | |
| 17 | (அ) எஞ்சியுள்ள உணவு சுகாதார ஒழுங்கு விதிகளுக்கேற்ப மீளப் பயன்படுத்தப்படுகிறது.<br>(ஆ) சமையல் எண்ணெய் மீளப் பயன்படுத்தப்படுகின்றதா ? அவ்வாறெனின், எத்தனை தடவைகள் ? | | | | | | |
| 18 | குளிரூட்டப்பட்ட உணவு வகைகள் திகதியுடன் குறியீடு இடப்பட்டுள்ளன. | | | | | | |

| | பாகம் VI<br>**ஆவணப்படுத்தல் செவ்வைபார்த்தற் பட்டியல் (அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் நிரப்பப்படுதல் வேண்டும்)** | | | |
|---|---|---|---|---|
| | | கிடைக்கக்கூடியதாக உள்ளது | கிடைக்கக்கூடியதாக இல்லை | குறிப்புரைகள் |
| 1 | தொழில் பதிவு | | | |
| 2 | சொத்தாண்மை/குத்தகை ஆவணம் | | | |
| 3 | உள்ளூர் அதிகார சபையிடமிருந்தான வியாபார உரிமம் | | | |
| 4 | கட்டிடத்துக்கான அனுமதி | | | |
| 5 | தரம் பற்றிய செல்லுபடியாகும் சான்றிதழ்கள் (GMP, ISO முதலியன) | | | |
| 6 | பொதுவான சுத்திகரிப்பு அட்டவணை | | | |
| 7 | கழிவறை சுத்திகரிப்பு அட்டவணை | | | |
| 8 | உணவைக் கையாள்பவர்கள் எல்லோரினதும் மருத்துவச் சான்றிதழ்கள் | | | |
| 9 | உபகரணப் பேணுகைத் திட்டம் | | | |
| 10 | பீடைக் கட்டுப்பாட்டு செயற்பாடுகள் பற்றிய பதிவேடுகள் | | | |
| 11 | பயன்படுத்தப்பட்ட பீடைக்கொல்லிகள் பற்றிய பதிவேடுகள் | | | |
| 12 | பீடைக் கட்டுப்பாட்டுச் செயற்பாடுகளில் பயன்படுத்தப்பட்ட இரசாயனங்கள் பற்றிய ஆவணங்கள் | | | |
| 13 | கிடைக்கத்தக்கவாறு தயார்நிலையில் உள்ள பீடைக்கட்டுப்பாட்டு பேரேடும் ஆவணப்படுத்தலும் | | | |
| 14 | பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள், ஆவணப்படுத்தப்பட்டவையாகவும் அவை சோதனைக்கு உட்படுத்தக்கூடியவையாகவும் உள்ளமை. | | | |

**விண்ணப்பதாரரின் வெளிப்படுத்துகை :**

இவ்விண்ணப்பத்திலும் அதனது இணைப்புக்களிலும் உள்ள தகவல்கள் யாவும் எனது அறிவுக்கெட்டியவரை சரியானவையும் துல்லியமானவையும் என்றும், பொய்யான தகவல் வழங்கப்பட்டிருப்பின் அல்லது தேவைப்படுத்தப்பட்ட எல்லாத் தகவல்களும் வழங்கப்படாதிருப்பின் இயைபான உணவு அதிகாரி பதிவை நிராகரிக்கலாம் அல்லது அதனை மீளப்பெறலாம் என்றும் நான் இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

விண்ணபத்திலுள்ள எல்லா வினாக்களுக்கான பதில்களையும் நிரப்புவதற்குத் தவறுதலானது அவ்விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதற்கு இட்டுச்செல்லக்கூடும் என்பதை நான் அறிந்துள்ளேன். இயைபான உணவு அதிகாரியினால் காலத்துக்குக் காலம் வழங்கப்படும் பணிப்புக்களுக்கு அமைந்தொழுகுவதற்கு நான் பிணிக்கப்பட்டுள்ளேன் என்றும் அதிலிருந்து தவறுவதனால் எனது பதிவு இல்லாதொழிக்கப்படக்கூடும் என்றும் நான் அறிந்துள்ளேன். விண்ணப்பத்துடன் சேர்த்து செலுத்தப்பட்டுள்ள விண்ணப்பக் கட்டணம் மீளளிக்கப்பட முடியாதென்றும் நான் மேலும் ஒப்புக்கொள்கின்றேன்.

-----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

பாகம் VII

**சோதனைகள் பற்றிய சுருக்கம் - 1 ஆவது விஜயம்**

| | திருப்தி | திருப்தி இல்லை | திருப்தி இல்லை எனின், திருத்தப்பட வேண்டிய குறைபாடுகள் (விடய இலக்கத்தைக் குறிப்பிடுக.) |
|---|---|---|---|
| பாகம் I | | | |
| பாகம் II | | | |
| பாகம் III | | | |
| பாகம் IV | | | |
| பாகம் V | | | |
| பாகம் VI | | | |

கண்டுபிடிப்புக்கள் பற்றி பரிசோதகரினால் எனக்கு அறிவிக்கப்பட்டது.

----------- ----------- -----------
விண்ணப்பதாரரின் கையொப்பம் விண்ணப்பதாரரின் பெயர் திகதி

அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் கருத்துரைகள் :
..........................................................................................................................................................

..........................................................................................................................................................

அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் விதப்புரை :
..........................................................................................................................................................

..........................................................................................................................................................

குறைபாடுகள் எவையேனும் இருப்பின் அவற்றை நிவர்த்தி செய்வதற்குத் தேவைப்படும் அவகாசம் :

..........................................................................................................................................................

............................................ ............................................
அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் கையொப்பம். திகதி

சுகாதார மருத்துவ அலுவலரின் கருத்துரைகள் :
..........................................................................................................................................................

அங்கீகரிக்கப்பட்டது/அங்கீகரிக்கப்படவில்லை.

............................................ ............................................
சுகாதார மருத்துவ அலுவலரின் கையொப்பம். திகதி

பாகம் VIII

**சோதனைகள் பற்றிய சுருக்கம் - 2 ஆவது விஜயம்**

| | திருப்தி | திருப்தி இல்லை | திருப்தி இல்லை எனின், திருத்தப்பட வேண்டிய குறைபாடுகள் (விடய இலக்கத்தைக் குறிப்பிடுக.) |
|---|---|---|---|
| பாகம் I | | | |
| பாகம் II | | | |
| பாகம் III | | | |
| பாகம் IV | | | |
| பாகம் V | | | |
| பாகம் VI | | | |

கண்டுபிடிப்புக்கள் பற்றி அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் எனக்கு அறிவிக்கப்பட்டது.

----------- ----------- -----------
விண்ணப்பதாரரின் கையொப்பம் விண்ணப்பதாரரின் பெயர் திகதி

அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் கருத்துரைகள் :

.............................................................................................................................................

.............................................................................................................................................

அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் விதப்புரை :

.............................................................................................................................................

.............................................................................................................................................

............................................ ............................................
அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் கையொப்பம். திகதி

சுகாதார மருத்துவ அலுவலரின் கருத்துரைகள் :

.............................................................................................................................................

.............................................................................................................................................

அங்கீகரிக்கப்பட்டது/அங்கீகரிக்கப்படவில்லை.

............................................ ............................................
சுகாதார மருத்துவ அலுவலரின் கையொப்பம். திகதி

*(ஒழுங்குவிதி 2 மற்றும் 3)*

## *அட்டவணை* II

### உணவு வளவுகளின் வகுதிகள்

(அ) ஹோட்டல் அல்லது உல்லாசப் போக்கிடம் ;
(ஆ) உணவு வழங்கு சேவைத் தாபனம் ;
(இ) உணவு விடுதி அல்லது உணவகம் ;
(ஈ) ஐஸ்கிறீம், தின்பண்டங்கள் அல்லது யோக்கட், தயிர், ஈற்றுணவு உற்பத்தி செய்யப்படும் குடிசைக் கைத்தொழில்
(உ) தேநீர், கோப்பி, பானங்கள், பரிமாறுவதற்குத் தயார் நிலையிலுள்ள குடிபானங்கள், ஐஸ்கிரீம் சிறுகடை ;
(ஊ) வெதுப்பகம் ;
(எ) சிற்றுண்டிச்சாலை ;
(ஏ) உண்பதற்குத் தயார் நிலையிலுள்ள அல்லது தயாரிக்கப்பட்ட உணவு பரிமாறப்படும் பல்பொருள் அங்காடி ;
(ஐ) உணவுக் களஞ்சியம் ;
(ஒ) ஐஸ் தயாரிக்கப்படும் வளவுகள்.

*(ஒழுங்குவிதி 4)*

## *அட்டவணை* III

உணவு (வளவுகளைப் பதிவுசெய்தல்) ஒழுங்குவிதிகளின்கீழ் வளவுகளைப் பதிவுசெய்வதற்காகப் பெறப்பட்ட விண்ணப்பங்கள் பற்றிய இடாப்பு

| தொடர் இல. | விண்ணப்ப தாரரின் பெயர் | பெறப்பட்ட திகதி | பொ.சு.ப.* பிரிவு | பொ.சு.ப.* இற்கு அனுப்பிய திகதி | சு.ம.அ.*/ மே.பொ.சு.ப. கையொப்பம் | அறவிடப் பட்ட கட்டணம் | பற்றுச்சீட்டு இல. | பதிவுச் சான்றி தழின் திகதி | பதிவுச் சான்றிதழின் இலக்கம் | கருத்துரைகள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |

*"பொ.சு.ப." என்பது, பொது சுகாதாரப் பரிசோதகர் எனப் பொருள்படும்.
"சு.ம.அ." என்பது, சுகாதார மருத்துவ அலுவலர் எனப் பொருள்படும் ; அத்துடன்
"மே.பொ.சு.ப." என்பது, மேற்பார்வை பொது சுகாதாரப் பரிசோதகர் எனப் பொருள்படும்.

(ஒழுங்குவிதி 5)

## அட்டவணை IV

வளவுகளைப் பதிவுசெய்வதற்காகப் பெறப்பட்ட விண்ணப்பங்கள் பற்றிய இடாப்பு

| தொடர் இல. | கோப்பு இலக்கம் | பெறப்பட்ட திகதி | வளவின் பெயர் | வளவின் முகவரி | விண்ணப்ப தாரரின் பெயர் | வளவின் வகுப்பாக் கம் | தொடங்கு வதற்கு உத்தேசிக் கப்பட்ட திகதி/ தாபிக்கப் பட்ட திகதி | சோதனை யிட்ட திகதிகள் | அங்கீகரிக்கப் பட்ட திகதி | கருத்துரைகள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |

(ஒழுங்குவிதி 4)

## அட்டவணை V

### வளவுகளைப் பதிவுசெய்வதற்கான விண்ணப்பங்களை செயல்முறைப்படுத்துவதற்கான கட்டணங்கள்

| வளவுகளின் வகுதிகள் | விண்ணப்பத்தை செயல் முறைப்படுத்துவதற்கான கட்டணம் (ரூபா) |
|---|---|
| 1. ஹோட்டல் அல்லது உல்லாசப் போக்கிடம்-பெரியது (4 நட்சத்திர அல்லது அதற்கு மேல்) | 50,000.00 |
| 2. ஹோட்டல் அல்லது உல்லாசப் போக்கிடம்-நடுத்தரமானது (3 நட்சத்திர) | 30,000.00 |
| 3. ஹோட்டல் அல்லது உல்லாசப் போக்கிடம் (ஏனையவை அனைத்தும்) | 20,000.00 |
| 4. உணவு வழங்கு சேவைத்தாபனம் | 10,000.00 |
| 5. உணவு விடுதி அல்லது உணவகம் | 5,000.00 |
| 6. ஐஸ்கிறீம், தின்பண்டங்கள் அல்லது யோக்கட், தயிர் உற்பத்தி செய்யப்படும் குடிசைக் கைத்தொழில்கள் | 5,000.00 |
| 7. உணவு தயாரிக்கும் அல்லது பதனிடப்படும் வசதி | 5,000.00 |
| 8. பல்பொருள் அங்காடி | 10,000.00 |
| 9. ஏனைய அனைத்தும் | 3,000.00 |

(ஒழுங்குவிதி 2)

## அட்டவணை VI

### உணவைக் கையாள்பவர்களின் மருத்துவப் பரிசோதனை பற்றிய அறிக்கை

விண்ணபதாரரினால் நிரப்பப்படுதல் வேண்டும்.

முதலெழுத்துக்களுடன் பெயர் :

வயது : பால் :

உங்களுக்கு எப்போதேனும் நாட்பட்ட வயிற்றோட்டம் இருந்துள்ளதா ? ஆம்/இல்லை

உங்களுக்கு எப்போதேனும் மஞ்சற்காமாலை இருந்துள்ளதா ? ஆம்/இல்லை

உங்களுக்கு நெருப்புக் காய்ச்சல் உள்ளதாக எப்போதேனும் கண்டறியப்பட்டுள்ளதா ? ஆம்/இல்லை

உங்களுக்கு அமிபா அழற்சி இருந்துள்ளதாக எப்போதேனும் கண்டறிப்பட்டுள்ளதா ? ஆம்/இல்லை

<table>
<tr><td colspan="6">மருத்துவ அலுவலரினால் நிரப்பப்படுதல் வேண்டும்.</td></tr>
<tr><td>பெயர்</td><td colspan="2"></td><td>திகதி</td><td colspan="2" rowspan="3"></td></tr>
<tr><td>முகவரி</td><td colspan="2"></td><td>தே. அ. அ. இலக்கம்</td></tr>
<tr><td>தொடர்பு இலக்கம்<br>(வேலைத்தலம்)</td><td></td><td colspan="2">தொடர்பு இலக்கம் (இல்லம்)</td></tr>
<tr><td colspan="4">மருத்துவக் கண்டுபிடிப்புக்கள்</td><td>ஆம்</td><td>இல்லை</td></tr>
<tr><td colspan="4">1. நாட்பட்ட வயிற்றோட்டத்தின் வரலாறு (7 நாட்களுக்கு மேற்பட்டது)</td><td></td><td></td></tr>
<tr><td colspan="4">2. பின்வருவனவற்றுள் ஏதேனும் அவருக்கு இருந்துள்ளதா ?</td><td></td><td></td></tr>
<tr><td colspan="4">(i) மீண்டும் மீண்டும் ஏற்படும் தோல் அல்லது காது தொற்று</td><td></td><td></td></tr>
<tr><td colspan="4">(ii) மீண்டும் மீண்டும் ஏற்படும் குடல் அழற்சி</td><td></td><td></td></tr>
<tr><td colspan="4">(iii) வேறு தொற்றுக்கள் (குறித்துரைக்கவும்.)</td><td></td><td></td></tr>
</table>

| | | |
|---|---|---|
| 3. ஏதேனும் நோயின் காவுநிலை பற்றிய வரலாறு | | |
| 4. தற்போது அவர் கீழே குறிப்பிடப்பட்ட நிலைமைகளுள் எவற்றினாலும் துன்புறுகின்றாரா ? | | |
| (i) கைகள், புயங்கள் அல்லது முகத்தைப் பாதிக்கின்ற சருமப் பிரச்சினைகள் | | |
| (ii) புரையோடிய விரல் கொப்புளங்கள், நகக்கண் கட்டிகள் | | |
| (iii) மூக்கிலிருந்து அல்லது முரசுகளிலிருந்து இரத்தம் வடிதல்/வடிந்தோடுதல் | | |
| (iv) மஞ்சட் காமாலை (கண்கள் மஞ்சள் நிறமாதல்) | | |
| (v) காய்ச்சலுடனான தொண்டைப்புண் | | |
| (vi) திறந்த மற்றும் வடிந்தோடும் வெட்டுக்காயங்கள் அல்லது காயங்கள், அல்லது கையில், மணிக்கட்டில், திறந்த உடற்பாகமொன்றில் சீழைக் கொண்டுள்ள சிதைவுக் காயங்கள் | | |
| 5. பின்வருவனவற்றுக்கான ஏதேனும் சான்று : | | |
| (i) புகைத்தல் (தனியே புகைத்தலுக்கான சான்று தகைமையீனமாகாது) | | |
| (ii) வெற்றிலை மெல்லுதல் (தனியே வெற்றிலை மெல்லுதலுக்கான சான்று தகைமையீனமாகாது) | | |
| (iii) சுகாதார குறைபாடு | | |
| 6. ஆய்வுகூடப் பரிசோதிப்புக்கள் | | |
| (i) மலக்கழிவு (AOC) | | |
| (ii) ஏதேனும் நோயாக்கிக்கான நாசித்துடைப்பு | | |
| (iii) UFR (அவசியமாகவிருப்பின்) | | |
| (iv) வேறு எவையேனும் பரீட்சிப்புக்கள் (தயவுசெய்து குறித்துரைக்கவும்) | | |

மருத்துவ அலுவலரின் விதப்புரை :

நான் இவ்வாளைப் பரிசோதித்துள்ளேன் என்றும், எனது அறிவுக்கெட்டியவரை அவர் உணவைக் கையாள்பவரொருவராகத் தொழிலுக்கமர்த்தப்படுவதற்குத் தகுதியுள்ளவராக உள்ளார் என்றும் சான்றுப்படுத்துகின்றேன்.

வேறு எவையேனும் கருத்துகள் :..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

| ........................................, | ........................................, | ........................................, |
|---|---|---|
| மருத்துவ அலுவலரின் கையொப்பம். | SLMC பதிவு இலக்கம் | திகதி |

(ஒழுங்குவிதி 10 மற்றும் 11)

## அட்டவணை VII

### உணவு வளவொன்றின் பதிவுச் சான்றிதழ்

(1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, உணவுச் சட்டத்தின்கீழ் வழங்கப்பட்டது)

| | |
|---|---|
| MOH பிரிவு | |
| பதிவு இலக்கம்<br>சுகாதார அமைச்சின் பொது சுற்றறிக்கை இலக்கம் 46/2017 இற்கு அமைவாக. | |
| வளவினது வகுதி | |
| வளவின் பெயரும் முகவரியும் | |

....................................................... இற்கு உரித்தாகவுள்ளதும் ...................................................... இல் அமைந்துள்ளதுமான மேலுள்ள வளவு, 2019 ஆம் ஆண்டு உணவு (வளவுகளைப் பதிவுசெய்தல்) ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகுவதாகவுள்ளதென்றும் ....................................................... இலிருந்து பயனுக்கு வரும் வகையில் மேலுள்ள உணவு வளவினது வகுப்பாக்கத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளதென்றும் இத்தால் சான்றுப்படுத்தப்படுகின்றது.

இவ்வொழுங்குவிதிகளின் எவையேனும் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகாமை காரணமாக முன்னரே இல்லாதொழிக்கப்பட்டாலொழிய, பதிவானது பதிவுச்சான்றிதழ் வழங்கப்பட்ட திகதியிலிருந்து இரண்டு ஆண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதிக்குச் செல்லுபடியாகும்.

..........................................,
உணவு அதிகாரி கையொப்பம். திகதி :

அலுவலக இலச்சனை

(ஒழுங்குவிதி 11)

## அட்டவணை VIII

### பதிவு செய்யப்பட்ட வளவு பற்றிய பதிவேடு

| பதிவேட்டின் தொடர் இல. | பதிவுச் சான்றிதழ் இலக்கம் | பதிவு செய்யப்பட்ட திகதி | வளவின் வகுதி | வளவின் பெயர் | வளவின் முகவரி | விண்ணப்ப தாரரின் பெயர் | குறிப்புரைகள் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |

07-07

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.